## பொதுக்காலத்தின் 15-ஆம் ஞாயிறு

*எசாயா 55:10-11; உரோமையர் 8:18-23; மத்தேயு 13:1-23*

### முன்னுரை

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு பெண்மணி எளிதில் புரிந்து கொள்ள கூடிய ஆனால் மிகவும் ஆழமான ஒரு கதையைப் பகிர்ந்துகொண்டார். அவர் நகரத்தில் நடத்தப்பட்டு வந்த ஒரு சிறு தோட்டக்கலை பயிற்சி மையத்தில் சேர்ந்திருந்தார். முதல் நாள் வகுப்பின் முடிவில், பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிய விதை பாக்கெட் வழங்கப்பட்டது. அவை சாதாரண காட்டுப்பூக்களின் விதைகள், பார்ப்பதற்கு எந்த சிறப்பும் இல்லை. அப்போது பயிற்றுவிப்பாளர் ஒரே ஒரு வாக்கியத்தை மட்டும் கூறினார்: “இந்த விதைகளை இப்போது பார்ப்பதை வைத்து எடைபோடாதீர்கள். இவற்றை மண்ணில் நடவு செய்யுங்கள்; உங்கள் கண்களுக்குத் தெரியாத அந்த மறைவான ஒரு ஆற்றலை நம்புவீர்கள்

அந்தப் பெண் அதை வீட்டுற்கு எடுத்து சென்றார் ஆனால் அதை மறந்துபோனார். அந்த விதை பாக்கெட் பல மாதங்களாக அவரின் வீட்டின் மேஜை இழுப்பறையிலேயே கிடந்தது. சில மாதங்களுக்குப் பிறகு, ஒரு பலத்த புயல் வந்து அவருடைய தோட்டத்தின் ஒரு பகுதியை முற்றிலும் பாழாக்கியது. அப்போது, அவர் தற்செயலாக இந்த பழைய விதை பாக்கெட்டை நினைவுகூர்ந்து, பாதிக்கப்பட்டு பாழடைந்து போயிருந்த அந்த நிலத்தில் விதைகளைத் தூவினார். நீண்ட நாட்களுக்கு ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், மெதுவாக அங்கிருந்து பச்சைத் தளிர்கள் முளைக்கத் தொடங்கின. நீண்ட காலத்திற்குப் பிறகு, ஒரு காலத்தில் வறண்டு கிடந்த அந்தப் பகுதி, அவருடைய தோட்டத்திலேயே மிகவும் அழகான, வண்ணமயமான பகுதியாக மாறியது.

அவரை மிகவும் கவர்ந்தது அந்தப் பூக்களின் அழகு மட்டுமல்ல, அந்த செடிகளின் வளர்ச்சிக்கு பின்னால் இருந்த "பொறுமை" என்ற மறைவான சக்திதான். வெளியே எதுவும் தெரிவதற்கு முன்பே, உள்ளே உயிர் துடித்துக் கொண்டிருந்தது!

நாம் வாழும் இந்த உலகம் உடனடி விளைவுகளையும் பலன்களையும் எதிர்பார்க்கிறது. வேலை, உறவுகள், ஏன் நமது விசுவாசத்தில் கூட உடனே பலன் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறோம். வெளியில் எதுவும் தெரியவில்லை என்றால், உள்ளே எதுவும் நடக்கவில்லை என்று நாம் தவறாக முடிவு செய்துவிடுகிறோம். ஆனால், உண்மையான ஆன்மீக மற்றும் மனித வளர்ச்சி என்பது நமது அவசரத்திற்கு கட்டுப்படுவதில்லை.

இன்றைய இறைவார்த்தை நமக்கு இதைத்தான் கற்பிக்கிறது. மறைந்திருப்பதை நம்பவும், மெதுவான வளர்ச்சியை ஏற்றுக்கொள்ளவும், வெளியில் எதுவும் தெரியாதபோதும் கடவுள் நமக்குள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை

விசுவாசிக்கவும் இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கின்றன. எனவே, நமது பலவீனங்களையும், கடவுளின் இந்த மறைவான செயல்களைக் காணத் தவறிய தருணங்களையும் ஒப்புக்கொண்டு, அவரிடம் நமது தேவைகளுக்காக மன்றாடுவோம்.

## மறையுரை

ஒரு மனிதர் தன் புதிய வீட்டின் பின்புறமிருந்த பாழடைந்த தோட்டத்தைப் பற்றி ஒரு கதையைக் கூறினார். ஒரு காலத்தில் அழகாக இருந்தது அவருடைய தோட்டம், ஆனால் இப்போது முட்செடிகளாலும், பாறைகளாலும், கடினமான பாறை நிலங்களாலும் நிறைந்திருந்தது. அதை ஒரே நாளில் சுத்தம் செய்ய வேண்டும் என்று அவர் நினைத்தார், ஆனால் அந்த வேலை அவருக்குப் மலைப்பாகவும் சுமையாகவும் இருந்தது. எனவே, அவர் ஒரு சிறிய பகுதியிலிருந்து வேலையை தொடங்கினார். நிலத்தைக் கொத்தினார், கற்களை அகற்றினார், முட்செடிகளை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு, சில விதைகளை நட்டார். பல வாரங்களாக எதுவும் நடக்கவில்லை. ஆனால் ஒரு நாள் காலை, சிறிய பச்சைத் தளிர்கள் எட்டிப்பார்த்தன. அந்தச் சிறிய பகுதி மாறத் தொடங்கியது. மெதுவாக, காலம் செல்லச் செல்ல, தோட்டம் முழுவதும் அழகாக மாறியது.

இந்தக் கதை, இன்று இயேசு நமக்குக் கூறும் உவமைக்கு மிக நெருக்கமாக இருக்கிறது.

இன்றைய மூன்று வாசகங்களுமே வளர்ச்சியைப் பற்றிப் பேசுகின்றன — ஆனால் அது உடனடி வளர்ச்சியோ, கண்களால் அளவிடக்கூடிய வளர்ச்சியோ அல்ல. இறைவாக்கினர் எசாயா கடவுளின் வார்த்தையை மழையோடும் பனியோடும் ஒப்பிடுகிறார்; அவை அமைதியாகப் பொழிந்து, மண்ணுக்குள் ஊடுருவி, கண்ணுக்குத் தெரியாமல் நிலத்தைச் செழிக்கச் செய்கின்றன. புனித பவுல் அடிகளார் படைப்பு அனைத்தும் பிரசவ வேதனையற்றுப் புலம்புவதாகவும், இன்னும் வெளிப்படாத மகிமைக்காகக் காத்திருப்பதாகவும் கூறுகிறார். நற்செய்தியில் இயேசு, ஒரு விதைப்பவர் விதைகளை தாராளமாக — கணக்குப்பாராமல் — அனைத்து வகையான நிலங்களிலும் தூவுவதை நமக்குக் காட்டுகிறார்.

மேலோட்டமாகப் பார்த்தால், இது ஒரு சிறந்த விவசாய முறை போலத் தெரியவில்லை. வழியோரம், பாறை நிலம், முட்செடிகள் என பல இடங்களிலும் விதைகள் வீணாவது போலத் தோன்றுகிறது. ஒரு பகுதி மட்டுமே பலன் தருகிறது. ஆனால் இயேசு இங்கு விவசாய நுட்பத்தைக் கற்றுத்தரவில்லை; மாறாக, கடவுள் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

கடவுள் கணக்குப் பார்த்து நமக்குக் கொடுப்பதில்லை. அவர் தகுதியான சூழ்நிலைகளுக்காகக் காத்திருப்பதும் இல்லை. விதை எல்லா இடங்களிலும் தூவப்படுகிறது — ஒவ்வொரு மனித வாழ்விலும், ஒவ்வொரு இதயத்திலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் அது விதைக்கப்படுகிறது. ஏனெனில், கடவுள் அந்த விதையின் மீது (இறைவார்த்தையின் மீது) முழு நம்பிக்கை வைத்துள்ளார்.

இது நமது வாழ்க்கையைப் பார்க்கும் பார்வையை மாற்றுகிறது.

நாம் எல்லாவற்றையும் அளவிடப் பழகிவிட்டோம்: வெற்றி-தோல்வி, முன்னேற்றம் மற்றும் முடிவுகள். எதுவும் நடக்காதபோது, அங்கே ஒன்றும் இல்லை என்று நினைக்கிறோம். ஆனால் விதையின் உவமை வேறு ஒன்றைச் சொல்கிறது. வாழ்க்கையின் மிக முக்கியமான வளர்ச்சி மறைமுகமானது. ஜன்னல் படியில் விதைத்துவிட்டு காத்திருக்கும் குழந்தையைப் போல, நாம் நீண்ட நாட்களுக்கு எதையும் காணாமல் இருக்கலாம். ஆனால் நிலத்தடிக்குள் ஏதோ ஒன்று ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மூங்கில் மரத்தின் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணம். மூங்கில் விதையை நட்ட பிறகு, பல ஆண்டுகளுக்கு வெளியில் எந்த வளர்ச்சியும் தெரியாது. நீங்கள் அதற்குத் தண்ணீர் ஊற்றிப் பராமரித்தாலும் எதுவும் முளைக்காது. ஆனால், சில வருடங்களுக்குப் பிறகு, மிகக் குறுகிய காலத்தில் அது அசுர வேகத்தில் உயரமாக வளரும். ஆனால், அதன் உண்மையான வளர்ச்சி இத்தனை ஆண்டுகாலம் பூமிக்கு அடியில் நடந்து கொண்டிருந்தது — அதன் வேர்கள் பரவி, அடித்தளம் பலப்பட்டுக் கொண்டிருந்தது.

நமது விசுவாச வாழ்வும் பல நேரங்களில் இப்படித்தான் இருக்கிறது. பலன் தராத செபம், பலனற்றதாகத் தோன்றும் முயற்சிகள், மாறாத உறவுகள்... இவை எல்லாமே வறண்ட நிலம் போலத் தோன்றலாம். ஆனால் நற்செய்தி சொல்கிறது: அவசரமாக முடிவு செய்யாதீர்கள், விதை உயிருடன் இருக்கிறது!

அதே நேரத்தில், இயேசு யதார்த்தமானவர். எல்லா நிலங்களும் விதையை ஒரே மாதிரியாக ஏற்பதில்லை. நாம் நேர்மையாகச் சிந்தித்துப் பார்த்தால், இந்த நான்கு வகையான நிலங்களும் நமக்குள்ளேயே இருப்பதைக் காணலாம்:

சில நேரங்களில் நாம் 'வழியோர நிலம்' போல இருக்கிறோம் — நமது வழக்கமான கடமைகள் அல்லது ஏமாற்றங்களால் இதயம் கடினமாகிவிடுகிறது. இறைவார்த்தை நம்மைத் தொடுகிறது, ஆனால் ஆழமாக ஊடுருவுவதில்லை.

சில நேரங்களில் நாம் 'பாறை நிலம்' போல இருக்கிறோம் — வார்த்தையைக் கேட்டவுடன் மிகுந்த மகிழ்ச்சியோடு

ஏற்றுக்கொள்கிறோம், ஆனால் ஆழமான வேர் இல்லை. துன்பங்கள் வரும்போது விசுவாசம் வாடிவிடுகிறது.

சில நேரங்களில் நாம் 'முள்நிலம்' போல இருக்கிறோம் — நல்ல காரியங்கள் தொடங்குகின்றன, ஆனால் கவலைகள், கவனச்சிதறல்கள், உலகப் பேராசைகள் ஆகியவற்றால் அவை நெருக்கப்பட்டுவிடுகின்றன. அவை கெட்ட காரியங்கள் அல்ல, ஆனால் அளவுக்கு அதிகமான காரியங்கள்.

ஆனால் சில நேரங்களில் — நாம் நினைப்பதை விட அதிகமாகவே — நாம் 'நல்ல நிலமாக' இருக்கிறோம். இறைவார்த்தை அமைதியாக வேரூன்றி, நம்மை மாற்றத் தொடங்குகிறது: பொறுமையில், மன்னிப்பில், பிறர் அறியாத சிறிய நற்செயலில் அது வெளிப்படுகிறது.

எனவே, நாம் கேட்க வேண்டிய கேள்வி: "நான் நல்ல நிலமா அல்லது கெட்ட நிலமா?" என்பது அல்ல. மாறாக, "இப்போது என் வாழ்வின் நிலப்பரப்பில் என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்பதுதான்.

ஏனெனில், நிலத்தை மாற்ற முடியும்!

கடினமான வழியோர நிலத்தை உழுது உடைக்க முடியும். பாறை நிலத்தை ஆழப்படுத்த முடியும். முட்களை அப்புறப்படுத்த முடியும்.

அந்தத் தோட்டக்காரரைப் போல, நாம் எல்லாவற்றையும் ஒரே நாளில் சரிசெய்ய வேண்டியதில்லை. கடவுளுக்கு நாம் கொடுக்கும் ஒரு சிறிய இடமே, ஒரு புதிய தொடக்கத்திற்குப் போதுமானது.

**இங்கே மற்றொரு எளிய கதை:**

ஒரு சோப்பு தயாரிப்பாளர் ஒரு குருவிடம் போய், “கிறிஸ்தவம் தோன்றி இத்தனை நூற்றாண்டுகள் ஆகியும், உலகில் இன்னும் இவ்வளவு தீமைகள் இருக்கிறதே!” என்று முறையிட்டார். அந்த குரு எதுவும் பேசாமல், தெருவில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு அழுக்கான உடையை அணிந்து கொண்டிருந்த குழந்தையைச் சுட்டிக்காட்டி, “சோப்பும் உலகத்தில் பல காலமாக இருக்கிறது, ஆனால் அதை எடுத்துப் பயன்படுத்தினால் மட்டுமே அது அழுக்கைப் போக்கும்” என்றார். பிறகு, “விசுவாசமும் அப்படித்தான்” என்று புன்னகைத்தார்.

விதை நம் இதயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், இந்த உவமை நாம் வெறும் நிலமாக இருப்பது பற்றி மட்டுமே பேசவில்லை. ஒரு வகையில், நாமும் அந்த விதையாகவும், விதைப்பவராகவும் இருக்கிறோம்.

நாம் ஒரு விதை: நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் இந்த உலகில் வளர்ந்து பலன் தருவதற்காகக் கடவுளால் நடப்பட்ட

ஒரு விதை. பல நேரங்களில் நம் கண் முன்னே பலன்களைப் பார்ப்பதில்லை. ஆனால் காலம் கடந்த பின்பு திரும்பிப் பார்க்கும்போது, நமது குணத்தில், உறவுகளில், விசுவாசத்தில் ஏதோ ஒன்று வளர்ந்திருப்பதை உணர்வோம்.

நாம் ஒரு விதைப்பவர்: ஒவ்வொரு நாளும் நாம் பேசும் வார்த்தைகளால், செயல்களால், மற்றவர்களை நடத்தும் விதத்தால் விதைகளைத் தூவிக்கொண்டே இருக்கிறோம். பெற்றோர் பிள்ளைகளுக்குள் விதைக்கிறார்கள்; நண்பர்கள் ஒருவருக்கொருவர் விதைக்கிறார்கள். ஒரு சிறிய அன்பான வார்த்தை, ஒரு நற்செயல், ஒரு திருவிவிலிய வசனம் கூட ஒருவருடைய வாழ்வில் நாம் அறியாத வகையில் வேரூன்றி வளரக்கூடும்.

ஒரு எளிய உதாரணம்: ஒவ்வொரு நாளும் இரவில் குடும்பமாக இணைந்து ஒரு சிறிய விவிலியப் பகுதியை வாசிக்கும் ஒரு குடும்பம். பார்ப்பதற்கு இதில் எந்தப் புதுமையும் இல்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல, அந்த இல்லத்தில் ஒரு புதிய ஆவி – அதிகப் பொறுமை, புரிதல் மற்றும் மன்னிப்பு – உருவாவதை நாம் காணலாம். விதை சிறியது, ஆனால் அதன் பலன் உண்மையானது.

இங்குதான் நமது நம்பிக்கை உறுதியாகிறது.

நாம் பல நேரங்களில் சோர்வடைந்து விடுகிறோம். உலகத்தையோ அல்லது நமது சொந்த வாழ்வையோ பார்க்கும்போது, கனிகளை விட முட்களே அதிகமாகத் தெரிகின்றன. புனித பவுல் அடிகளார் இந்த உணர்வை நன்றாகப் புரிந்திருந்தார்: படைப்பே "பிரசவ வேதனையுற்றுப் புலம்புகிறது" என்கிறார். வாழ்க்கை இன்னும் முழுமையடையவில்லை, விசுவாசம் பலவீனமாகத் தோன்றலாம்.

ஆனால், பவுல் அடிகளார் ஏமாற்றத்தோடு முடிப்பதில்லை. இது பிரசவ வேதனை போன்றது – அதாவது ஒரு புதிய உயிர் பிறக்கப் போகிறது என்கிறார்.

இயேசுவும் தன் உவமையை வீணான விதைகளோடு முடிக்கவில்லை. அவர் அறுவடையோடு முடிக்கிறார்: முப்பது, அறுபது, நூறு மடங்கு பலன்!

இதுதான் கடவுளின் கணக்கு. எல்லாமே பலன் தராமல் போகலாம், ஆனால் பலன் தருபவை நம் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்!

எனவே, இன்றைய அழைப்பு எளிதானது, ஆனால் சவாலானது:

விதையை நம்புங்கள்,

இதய நிலத்தில் இடமளியுங்கள்,

தொடர்ந்து விதையுங்கள்.

பலன்கள் உடனடியாகத் தெரியாதபோதும், வளர்ச்சி மெதுவாக இருக்கும்போதும், பல விஷயங்கள் வீணாவது போலத் தோன்றும்போதும்... தொடர்ந்து விதைத்துக் கொண்டே இருங்கள்.

ஏனெனில், இறுதி ஆற்றல் நம்மிடம் இல்லை — அது கடவுள் தாராளமாக, கணக்கின்றி நமக்குத் தொடர்ந்து தரும் அவருடைய 'இறைவார்த்தை' என்னும் விதையில்தான் உள்ளது.

இறுதியாக, இன்னும் ஒரு கதையோடு நிறைவு செய்கிறேன்..

ஒருமுறை, ஆசிரியர் ஒருவர் தன் வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு விதையைக் கொடுத்து, அதை ஒரு குப்பியில் நட்டு, ஒரு வாரத்திற்குப் பிறகு எடுத்து வருமாறு கூறினார். ஒரு வாரத்திற்குப் பின், ஒரு சிறுவன் மட்டும் வெற்றுத் தொட்டியோடு, மிகுந்த சங்கடத்தோடும் வெட்கத்தோடும் வகுப்பிற்கு வந்தான். அவன், "நான் இதற்கு தினமும் தண்ணீர் ஊற்றினேன் ஐயா, ஆனால் இதில் எதுவும் முளைக்கவில்லை" என்றான்.

ஆசிரியர் புன்னகைத்துவிட்டு, "நீ ஒருவன் மட்டும்தான் இங்கு உண்மையுள்ளவன். நான் உங்கள் அனைவருக்கும் அவித்து வேகவைத்த விதைகளைக் கொடுத்தேன் — அவை ஒருபோதும் முளைக்க வாய்ப்பே இல்லை" என்றார். மற்ற மாணவர்கள் அனைவரும் தாங்கள் வெற்றியாளர்களாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, அந்த விதைகளை மாற்றிவிட்டு வேறு புதிய விதைகளை நட்டு எடுத்து வந்திருந்தனர்.

பிறகு அந்த ஆசிரியர் கூறினார்: "உண்மையான வளர்ச்சியை ஒருபோதும் போலியாக உருவாக்க முடியாது. ஆனால், எங்கு உண்மையான உயிர் இருக்கிறதோ, அது மறைந்திருந்தாலும் கூட, அதற்குரிய நேரத்தில் கண்டிப்பாக வெளிப்படும்."

கடவுள் நம்மிடம் வெளியில் தெரியக்கூடிய உலகப் பிரகாரமான வெற்றியை எதிர்பார்ப்பதில்லை. அவர் நம்மிடம் அதைவிட உண்மையான சில காரியங்களை எதிர்பார்க்கிறார்: இறைவார்த்தைக்கு நம்மை ஒப்புக்கொடுத்தல் , பொறுமை மற்றும் உண்மைத் தன்மைகளை எதிர்பார்க்கிறார்

ஏனெனில், பூமிக்கு மேல் பொழியும் மழையைப் போல, மண்ணுக்குள் புதைந்திருக்கும் விதையைப் போல, அவருடைய வார்த்தையும் ஒருபோதும் பலனின்றி அவரிடம் திரும்பாது.

நாம் இன்னும் காணாத பல வழிகளில், அது ஏற்கனவே நமக்குள் ஒரு புதிய வாழ்வை உருவாக்கத் தொடங்கிவிட்டது.

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai